சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

**வா.சா.ஆ 6– வினோத்குமார்** **நாள் 17.03.2026**

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

தாவா சொத்திற்கு நான்கு மால் நான் நிர்ணயம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அதை நாங்கள் செய்யமாட்டோம்.

**5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

திருச்சுழி தாலுகா அலுவலகத்தில் நான் எத்தனை வருடங்களாக வட்ட சார் ஆய்வாளராக ( நில அளவையர்) பணிபுரிந்து வருகிறேன் என்றால் கடந்த 1.1/2 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். சாட்சியம் அளிப்பதற்கு திருச்சுழி வட்டாட்சியருக்கு தான் சம்மன் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு அனுமதி கடிதம் கொடுத்துள்ளார்கள். நான் எனது முதல் விசாரணையில் சர்வே எண் 108/2 A விற்கு 26.07.2018 ம் தேதி பட்டா கோரி இணைய வழி மூலமாக மனு அளிக்கப்பட்டது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்பது பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது. 30.11.2018 ம் தேதி பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பப்பட்டதாக சொல்லியுள்ளேன் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 31.10.2018 ல் களத்திற்கு சென்று சொத்தை பார்வையிட்டு புல வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் களத்திற்கு சென்று புல வரைபடம் தயார் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 31.10.2018 ம் தேதி அன்று யார் புல வரைபடம் தயார் செய்தார்களோ அவர்களை விசாரித்தால் தான் உண்மையான நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான். சில சமயம் பணி சுமை காரணமாக அலுவலத்தில் வைத்தே புல வரைபடம் தயார் செய்யப்படும் என்றால் சரியல்ல.

சா.சா.ஆ 2 ஆவணம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படுவது சர்வே எண். 108/2 க்குரிய SLR பதிவேடு என்றால் சரிதான். அது **சா.சா.ஆ 12**. SLR ல் சொத்தின் உரிமையாளராக முனியாண்டி, திருப்பதி, ராமு ஆகியோர்கள் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. SLR ல் பட்டா எண் 81 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. SLR ன் படி மேற்படி 3 நபர்களுக்கும் சொத்தில் உரிமை உண்டு என்றால் சரிதான். சர்வே எண். 108/2 யை பொறுத்து உட்பிரிவு செய்ய வேண்டும் என்றால் உட்பிரிவு செய்யக்கோரும் நபர்கள் பெயரில் ஏதேனும் ஆவணம் இருக்க வேண்டும் என்றால் சரிதான். எந்தவித ஆவணமும் இல்லாமல் UDR காலத்தில் ஒரு உரிமையாளரின் வாரிசுக்கு மட்டும் பட்டா ஏற்பட்டியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அந்த தவறான பட்டாவின் அடிப்படையில் சொத்தை கிரையம் செய்திருந்தால் அதுவும் தவறு தான் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை பொறுத்து மாற்றம் செய்வதற்கான உத்தரவை RDO, DRO பிறப்பிக்கும் பட்சத்தில் அதன்படி கிராம கணக்குகளில் நாங்கள் திருத்தம் செய்வது வழக்கம் என்றால் சரிதான். அவ்வாறு உத்தரவு பிறப்பித்து கிராம கணக்குகளில் திருத்தம் செய்யவில்லை என்றாலும் தவறு தான் என்றாலும் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 25.11.2022 ம் தேதியிட்ட சர்வே எண். 108/2 சம்பந்தமாக அதற்குரிய பட்டாவை SLR ல் கண்டுள்ள படி நபர்களின் பெயரில் ஏற்படுத்தியதற்கான DRO உத்தரவு என்றால் சரிதான். அது **சா.சா.ஆ 13**. DRO உத்தரவு நகல் எங்கள் அலுவலத்திற்கும் அனுப்பப்பட்டது என்று சா.சா.ஆ 13 ல் உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ 13 ல் கிராம/வட்ட கணக்குகளில் உரிய பதிவு மாறுதல்கள் மேற்கொள்ளவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.108/2 கிராம கணக்குகளில் மாற்ற செய்ய DRO உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு முன்பாக ஏற்பட்டுள்ள சா.சா.ஆ 3 முதல் சா.சா.ஆ 10 வரை ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. SLR கொண்டு வந்தால் யார் பெயரில் பட்டா உள்ளது என்ற விபரம் தெரிய வரும்

என்பதால் அதை கொண்டு வரவில்லை என்றால் சரியல்ல. SLR நகல் எங்கள் அலுவலகத்தில் பராமரிப்பதில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தான் பராமரிக்கப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

OS No.209/2022

**வா.சா.ஆ 7– ஜெகதீஸ்வரி** **நாள் 17.03.2026**

**<u>8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

**<u>5, 6 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ 13 ஆவணம் 25.11.2022 ம் தேதியிட்ட மாவட்ட வருவாய் அலுவலரால் வழங்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். சா.சா.ஆ 13 ன் நகல் எங்கள் அலுவலகத்திற்கும் அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.